

# நம் அனைவருக்கும் ஒரு பல்கலாசார எதிர்காலம்

## குயின்ஸ்லாந்து பல்கலாசாரக் கொள்கை 2011

## பல்கலாசார குயின்ஸ்லாந்து

ஒரு பெருமை வாய்ந்த, உயிர்த்துடிப்பான, பல்கலாசார மரபுரிமையை குயின்ஸ்லாந்து கொண்டுள்ளது. நமது வேறுபட்ட தன்மை நம் மிகப்பெறும் வலிமைகளில் ஒன்றாகும்.

ஆரம்பக் குடியேற்றவாசிகள் முதல் தற்போதைய புலம் பெயர்ந்தோர், அகதியர், மனிதாபிமான அடிப்படையில் நுழைந்தோர், பின்வந்த பரம்பரையினர் அனைவரும் நவீன குயின்ஸ்லாந்தை உருவாக்கினர். ஒவ்வொரு சமுதாயமும் குயின்ஸ்லாந்தின் பாரம்பரியக் கலாசார மரபுரிமையில், பரம்பரை உரிமைகளில் மற்றும் சொத்துக்களில் தன் பங்கைச் சேர்த்திருக்கின்றது.

## உண்மைகளும், எண்ணிக்கை விளக்கங்களும்

| | |
|---|---|
| மதிப்பீடு செய்யப்பட்டுள்ள குயின்ஸ்லாந்தின் மக்கள் தொகை (2011) | 4.58 மில்லியன் |
| வெளிநாட்டில் பிறந்தவர்கள் | 6 பேரில் ஒருவர் |
| 2056-ல் குயின்ஸ்லாந்தின் மக்கள் தொகை | 7.9 மில்லியன் |
| மக்கள் தொகை வளர்ச்சி | ஒரு ஆண்டுக்கு 76,040 வெளிநாட்டிலிருந்து புலம் பெயர்ந்தோர் 41.6 விழுக்காடு |
| ஆஸ்திரேலியப் பொருளாதாரத்துக்கு புலம் பெயர்ந்தோரின் பங்கு | 1.16 பில்லியன் டாலர்கள் |
| குயின்ஸ்லாந்துக்கு வருகை தரும் திறன்மிகு புலம் பெயர்ந்தோர் | ஒரு ஆண்டுக்கு 16,290 |
| மனிதாபிமான அடிப்படையில் நுழைவோர் | ஒரு ஆண்டுக்கு 1470 |

## பல்கலாசார குயின்ஸ்லாந்துக்கான கோட்பாடுகள்

அனைத்து குயின்ஸ்லாந்தினரும்:

- குயின்ஸ்லாந்து மற்றும் ஆஸ்திரேலியாவுக்கான பொறுப்புகளைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்
- நமது சமுதாயத்துக்கு வேறுபட்ட தன்மையைக் கொண்டுவரும் பங்களிப்பை வரவேற்று, மதிப்புக் கொடுக்க வேண்டும்
- மாநிலத்தின் சட்டங்களுக்கு இணங்கி நடந்து, சட்டங்கள் உருவாக்கப்படும் ஜனநாயகச் செயல்பாடுகளை மதிக்கும் பொறுப்பு கொண்டிருக்க வேண்டும்
- கலாசார, மத, இன மற்றும் மொழிப் பின்புலம் எதுவாக இருந்தாலும், பரஸ்பர மரியாதை மற்றும் புரிந்துணர்வுடன் நியாயமாக நடத்தப்பட வேண்டும்
- சட்டங்கள், அபிலாசைகள், விழுமியங்கள், பொறுப்புகள் இவைகளுக்குட்பட்டு நம்முடைய கலாசாரத்தை வெளிப்படுத்தவும், மேம்படுத்தவும் முடியும்
- குயின்ஸ்லாந்தின் தொடர்ந்த மேம்பாட்டுக்கு உழைக்க வேண்டும்
- இந்த மாநிலத்தின் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் வாழ்க்கையில் பங்குபெறும் மற்றும் வழங்கிடும் வாய்ப்புகளைக் கொண்டிருக்க வேண்டும்
- மாநிலம் வழங்கும் சேவைகள் அல்லது மாநிலத்தால் நிதியுதவி செய்யப்படும் சேவைகளைச் நியாயமாகப் பெற வேண்டும்
- குயின்ஸ்லாந்து வலுவாக, அறிவுத்திறனோடு, பசுமையாக, ஆரோக்கியமாக, நியாயமாக இருக்க, நமது இலட்சியங்கள் மற்றும் விடாமுயற்சிகளின் நன்மைகளை நமக்குள் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்

Queensland Government



## கொள்கையின் கருப்பொருள்

புதிய குயின்ஸ்லாந்தின் பல்கலாசாரக் கொள்கை - *நம் அனைவருக்கும் ஒரு பல்கலாசார எதிர்காலம்*, குயின்ஸ்லாந்து அரசின் முன்னுரிமைகளை எடுத்துரைக்கிறது. நமது திணைக்களங்களும், முகவர்களும் பின்வரும் முக்கியக் கருப்பொருள்களின் அடிப்படையில் இயங்குகின்றன:

- பல்கலாசார அங்கீகாரச் சட்டம்
- மொழி, தகவல் மற்றும் தகவல் தொடர்பு
- சேவை வழங்குதலை மேம்படுத்துதல்
- வட்டார மற்றும் வெளிக்கிளம்பும் சமுதாயங்கள்
- திறன்மிகு வேலைகள் மற்றும் தொழிலகங்கள்
- உள்ளடங்கிய சமுதாயங்கள்

## மேல் விவரங்கள்

“நம் அனைவருக்கும் ஒரு பல்கலாசார எதிர்காலம்” மற்றும் “குயின்ஸ்லாந்து பல்கலாசாரம்” பற்றிய மேலதிக விவரங்களுக்கு செயல்பாட்டுத் திட்டம் 2011-14-க்கு குயின்ஸ்லாந்து பல்கலாசார விவகாரங்களை 131304 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது www.communities.qld.gov.au/multicultural என்ற இணையதளத்துக்குச் செல்லுங்கள்

2393-11 ஜூலை 11